Dhinathdhalam@gmail.com

www.dhinathdhalam.com

**விளம்பரதாரர்கள் தேவை**

தமிழகம் முழுவதும் 234
சட்டமன்ற தொகுதிகளுக்கும்
செய்தி – விளம்பரம்
சேகரிக்க முழு நேர – பகுதி நேர
பணிக்கு தகுந்த ஆட்கள் தேவை.

☎ 9 111 222 654

# தினத்தளம்

நடுநிலை நாளிதழ்

PRGI NO: TNBIL/25/A3556 ISO : 9001:2015; QT-57977/1125

DHINATH DHALAM Tamil & English daily Paper

நிர்வாக ஆசிரியர் : முனைவர். எஸ்.மோகன்ராஜ் M.A.,PGDJMC.,Ph.D.,

ஆசிரியர் : முனைவர். எம்.ஹரிகிருஷ்ணன் B.A.,

**செய்தியாளர்கள் தேவை**



தமிழகம் முழுவதும்
மாவட்டம் & தாலுகா
வாரியாக சந்தாதாரர்
அடிப்படையில்
ஆண்/பெண்
நிருபர்கள் தேவை

☎ 94440 82959

மலர் Volume : 01 | இதழ் Issue : 120 | திங்கள் Monday | 02.03.2026 | பக்கங்கள் Pages:4 | ₹6 | ஈரோடு Erode

# மதுரையில் ரூ.4,500 கோடிக்கு மேல் மதிப்புள்ள திட்டங்கள்

## பிரதமர் நரேந்திர மோடி தொடங்கி வைத்தார்



மதுரையில் ரூ.4500 கோடிக்கு மேல் மதிப்புள்ள திட்டங்களை பிரதமர் மோடி தொடங்கி வைத்தார் "தமிழக ரயில் திட்டத்துக்கான நிதி ஒதுக்கீடு 9 மடங்கு அதிகரித்துள்ளது.2009 முதல் 2014 வரை ரூ.880 கோடியாக இருந்த நிதி ஒதுக்கீடு 2026 – 27 ஆண்டில் ரூ.7600 கோடியாக உயர்ந்தது" என பிரதமர் மோடி பேசினார்.

தமிழகத்தில் ரூ.4,400 கோடி மதிப்புள்ள மரக்காணம் – புதுச்சேரி நான்கு வழிச்சாலை,பரமக்குடி – ராமநாதபுரம் பிரிவு நான்கு வழிச்சாலை திட்டங்களுக்கு அடிக்கல் நாட்டு விழா, பொம்மிடி, காரைக்குடி, மணப்பாறை, மொரப்பூர், பொள்ளாச்சி, சோழவந்தான், ஸ்ரீவில்லித்புத்தூர் மற்றும் திருவாரூர் அம்ரித் ரயில் நிலையங்கள் திறப்பு மற்றும் சென்னை கடற்கரை-சென்னை எழும்பூர் 4வது ரயில் வழித்திட்டம் நாட்டுக்கு அர்ப்பணிக்கும் விழாக்கள் மதுரை விமான நிலைய வளாகத்தில் நடைபெற்றன.

இத்திட்டங்களை தொடங்கி வைத்துப் பேசிய பிரதமர் நரேந்திர மோடி, "புனிதமான மதுரை மாநகருக்கு வருவதை பெரும் கவுரவமாக உணர்கிறேன். மதுரையை ஆட்சி செய்யும் மீனாட்சியம்மனுக்கும், சுந்தரேஸ்வருக்கும் தலை வணங்குகிறேன். இந்த விழா தமிழ்நாட்டின் வளர்ச்சிப் பயணத்தில் முக்கியமானது. இன்று ரூ.4,500 கோடிக்கு மேல் மதிப்புள்ள திட்டங்களை தொடங்கி வைத்துள்ளேன்.

இத்திட்டங்கள் நாட்டின் பொருளாதார வளர்ச்சியை மேம்படுத்தும், விவசாயிகள், சுற்றுலா பயணிகள், புனித யாத்திரை மேற்கொள்பவர்களுக்கு அதிக பயனளிக்கும். இதுபோன்ற உயர்தர கட்டமைப்புகளை உருவாக்குவது மக்களுக்கு அதிகார பங்களிப்பை அளிப்பதாகும்.

கடந்த 12 ஆண்டுகளாக தமிழக நெடுஞ்சாலை வளர்ச்சிக்கு மத்திய அரசு அதிக நிதி ஒதுக்கி வருகிறது. தமிழகத்தில் 2014 முதுல் 4,000 கிலோ மீட்டர் தூரத்துக்குபுதியசாலைகள் அமைக்கப்பட்டுள்ளன. இன்று இரண்டு பெரிய தேசிய நெடுஞ்சாலை திட்டங்களுக்கு அடிக்கல் நாட்டப்பட்டுள்ளது. மரக்காணம்-புதுச்சேரி நான்கு வழிச்சாலை திட்டத்துக்கு ரூ.2,100 கோடி ஒதுக்கப்பட்டுள்ளது.

இத்திட்டத்தால் தமிழ்நாடு – புதுச்சேரி கடற்கரைப் பகுதியில் சுற்றுலா, வர்த்தகம், பொருளாதாரம் பலமாகும்.பரமக்குடி – ராமேஸ்வரம் நான்கு வழிச்சாலை திட்டத்துக்கு ரூ.1,800 கோடி ஒதுக்கப்பட்டுள்ளது. இந்தச் சாலையால் ராமேஸ்வரம் – தனுஷ்கோடி பகுதி முன்னேறும். ராமேஸ்வரத்துக்கு புனித பயணம் மேற்கொள்பவர்கள், வேளாண் உற்பத்தி பொருட்களை சந்தைக்கு எடுத்துச் செல்லும் விவசாயிகள், கடல்சார் பொருட்களின் போக்குவரத்தையும் மேம்படுத்தும்.

கடந்த 10 ஆண்டுகளில் இந்திய ரயில்வேத்துறை பெரும் மாற்றம் கண்டுள்ளது. ரயில் போக்குவரத்து, நவீன திறன் மிகுந்த மக்கள் சார்ந்த போக்குவரத்தாக மாறியுள்ளது. இந்த மாற்றம் தமிழகத்தில் நன்கு தெரிகிறது. தமிழக ரயில் திட்டத்துக்கான நிதி ஒதுக்கீடு பாஜக ஆட்சிக்குவந்தபிறகு 9 மடங்கு அதிகரித்துள்ளது. 2009 முதல் 2014 வரை நிதி ஒதுக்கீடு ரூ.880 கோடியாக இருந்தது. 2026-2027 நிதியாண்டில் இது ரூ.7600 கோடியாக உயர்ந்தது. தமிழ்நாட்டில் 1300 கிலோ மீட்டருக்கு அதிகமாக புதிய ரயில் பாதைகள் அமைக்கப்பட்டுள்ளன. 97 சதவீத மின்மயமாக்கல் பணிகள் முடிந்துள்ளன. நூற்றுக்க ணக்கான மேம்பாலங்கள், சுரங்கப்பாதைகள் அமைக்கப்பட்டுள்ளன. கடந்தாண்டு ராமேஸ்வரத்தில் புதிய பாம்பன் பாலம் திறக்கப்பட்டது. இது இந்தியாவின் முதல் செங்குத்து தூக்கு கடல் பாலமாகும். இது நமது பொறியியல் திறனின் அடையாளமாகும். இப்பாலம் சுற்றுலா பயணிகளை அதிகளவில் ஈர்த்து வருகிறது.

தமிழகத்தில் தற்போது 9 வந்தே பாரத், 9 அம்ரித் பாரத் ரயில்கள் சேவையாற்றிவருகின்றன.இந்த ரயில்களின் பெட்டிகள் சென்னையில் தயாரிக்கப்படுகின்றன. இதனால் ஏராளமான இளைஞர்கள் வேலைவாய்ப்பை பெற்று வருகின்றனர். அம்ரித் திட்டத்தில் 77 ரயில் நிலையங்கள் நவீனப்படுத்தப்பட்டு வருகின்றன. இந்த ரயில் நிலையங்களில் மக்களுக்கு தேவையான அனைத்து வசதிகளும் செய்யப்பட்டுள்ளன.

கும்பகோணம், ஏற்காடு, வேலூர் ஆகாசவாணி புதிய பண்பலை அஞ்சல் நிலையங்கள் மக்கள் சேவைக்கு அர்ப்பணிக்கப்பட்டுள்ளன. தமிழக உள்கட்டமைப்புக்கான நிதி ஒதுக்கீடு கடந்த 10 ஆண்டுகளை ஒப்பிடுகையில் 3 மடங்கு அதிகரித்துள்ளது. 2026 மத்திய பட்ஜெட்டில் தமிழகத்துக்கு அதிக முக்கியத்துவம் அளிக்கப்பட்டது. அந்த பட்ஜெட்டில் சென்னை - பெங்களூர், சென்னை - ஹைதராபாத் புல்லட் ரயில் திட்டம் அறிவிக்கப்பட்டது. இத்திட்டம் இப்பகுதிகளின் பொருளாதாரத்தை முழுமையாக மேம்படுத்தும். ஆதிச்சநல்லூர் போன்ற வரலாற்று சிறப்புமிக்க இடங்கள் உலகளவில் வரலாற்று சிறப்பு மிக்க இடமாக மாற்றப்படும். புலிகாட் ஏரி, பொதிகை மலைப்பகுதி ஆகியவற்றில் சுற்றுச்சூழல் முன்னெடுப்புகள் மேற்கொள்ளப்படும். இதனால்வேலைவாய்ப்புகள் பெருகும். அதே நேரத்தில் இயற்கை வளம் பாதுகாக்கப்படும்.

நாடு முழுவதும் 200 தொழில்துறை தொகுப்புகள் அடையாளம் காணப்பட்டுள்ளன. இங்கு தயாரிப்புகள் ஊக்கப்படுத்தப்படும். இதில் தமிழ்நாட்டிலும் பல்வேறு தொழிற்சாலைகள் உள்ளன. இதனால்தமிழக இளைஞர்கள் பலனடைவர்.

2047க்குள் வளர்ச்சியடைந்த இந்தியாவை உருவாக்க வேண்டும் என்ற உணர்வில் ஒவ்வொரு இந்தியரும் உள்ளனர்.நாட்டின் எதிர்காலத்தை வடிவமைப்பதில் தமிழ்நாடு முக்கிய பங்காற்றும். நம் அனைவரின் மொத்த இலக்கும் வளர்ச்சியடைந்த இந்தியா மற்றும் வளர்ச்சிடைந்த தமிழகத்தை உருவாக்குவதாகஇருக்க வேண்டும். அனைவரையும் உள்ளடக்கிய மாநிலத்தின் முன்னேற்றத்தை உறுதி செய்வதில் மத்திய அரசு முழு அர்ப்பணிப்புடன் செயல்பட்டு வருகிறது" என்று தெரிவித்தார்.

முன்னதாக மத்திய அமைச்சர் எல்.முருகன் பேசுகையில், "பிரதமர் மோடி தமிழக மக்கள், தமிழ் மொழி, தமிழ் கலாச்சாரத்தின் மீது அதிக பற்று வைத்துள்ளார். இதனால் தான் உலகம் முழுவதும் திருக்குறள் கலாச்சார மையம் திறந்து வருகிறார். திருக்குறளை 35க்கும் மேற்பட்ட மொழிகளில் மொழி பெயர்த்துள்ளார். இதுவரை தமிழகத்துக்கு ரூ.12 லட்சம் கோடி நிதி வழங்கியுள்ளார். பிரதமர் மோடி தமிழகம் வரும் போதெல்லாம் பல்வேறு நலத்திட்டங்களை தொடங்கி வைத்து வருகிறார்.

ரூ.4,500 கோடி நலத்திட்டங்களை தொடங்கி வைத்துள்ளார்" என தெரிவித்தார்.

தமிழக ஆளுனர் ஆர். என்.ரவி,தமிழகபொதுப்பணித்துறை அமைச்சர் ஏ.வா.வேலு, அதிமுக பொதுச்செயலாளர் பழனிசாமி, பாஜக மாநில தலைவர் நயினார் நாகேந்திரன் உள்ளிட்டோர் பங்கேற்றனர்.

# இந்தியாவின் தலைசிறந்த மாநிலமாக தமிழ்நாட்டை உயர்த்தி இருக்கிறேன்; முதலமைச்சர் ஸ்டாலின் பெருமிதம்




சென்னை: இந்தியாவின் தலைசிறந்த மாநிலமாகத் தமிழ்நாட்டை உயர்த்திக் காட்டியிருக்கிறேன் என மு.க.ஸ்டாலின் தனது பிறந்தநாளை முன்னிட்டு சமூக வலைதளத்தில் பதிவிட்டுள்ளார்.

தமிழக முதலமைச்சரும், திமுக தலைவருமான மு.க.ஸ்டாலின், இன்று அவரது 73 ஆவது பிறந்தநாளை கொண்டாடுகிறார். அவருக்கு அரசியல் தலைவர்கள், கட்சி நிர்வாகிகள், திரை பிரபலங்கள், கட்சி தொண்டர்கள் என பலரும் தங்களது வாழ்த்துகளை தெரிவித்து வருகின்றனர்.

தனது பிறந்தநாளை, குடும்பத்தினருடன் வீட்டில் கேக் வெட்டி கொண்டாடிய ஸ்டாலின் பெரியார், அண்ணா, கருணாநிதி நினைவிடங்களில் மரியாதை செலுத்துகிறார். தொடர்ந்து, கோபாலபுரத்திற்கு சென்று அவரது தாயார் தயாளு அம்மாளிடமும், சிஐடி நகரில் ராஜாத்தி அம்மாளிடமும் வாழ்த்து பெறவுள்ளார். இந்த நிலையில், தனது பிறந்தநாளை யொட்டி மு.க.ஸ்டாலின் அவரது எக்ஸ் தள பக்கத்தில், "தமிழும், தமிழ்நாடும் நம் உயிர். அவற்றை காப்பது நம் கடமை. உழைப்பைத் தவிர வேறொன்று அறியேன் எனச் சொல்லி, இளமை முதல் 73-ஆம் வயது காணும் இந்நாள் வரையில், நாட்டுக்கும் நாட்டு மக்களுக்கும் பணியாற்றுவதே என் வாழ்நாள் கடமை என செயலாற்றி வருகிறேன்.

தமிழும், தமிழ்நாடும் தலைநிமிர்ந்த வரலாற்றில் நான் சிறுதொண்டனாய் இருந்தாலும், கிடைக்கின்ற வாய்ப்புகளில் எல்லாம் பெருந்தொண்டாற்றிடவே நினைக்கிறேன். அந்த உறுதியோடுதான், திராவிட மாடலில் தமிழ்நாட்டை முதன்மை மாநிலமாக்கி, முன்னேற்றப் பாதையில் நடைபோட்டு கொண்டிருக்கிறோம்.

உலகம் திரும்பிப் பார்க்கும் வகையில், இந்தியாவின் தலைசிறந்த மாநிலமாகத் தமிழ்நாட்டை உயர்த்திக் காட்டியிருக்கிறேன். கோடிக்கணக்கான தமிழ்நாட்டு மக்கள் ஒவ்வொருவர் உள்ளத்திலும் இல்லத்திலும் போய் சேர்ந்துள்ளது திராவிட மாடல் ஆட்சியின் திட்டங்களும், சாதனைகளும்.

தனிக்குணம் கொண்ட தமிழர் தலைநிமிர்ந்து வாழ்கின்றனர். நாட்டிற்கே புத்தொளியை வழங்குகின்றனர் என்று புகழும் வகையில் தமிழ்நாடு உயர்ந்து நிற்கிறது. நம் தமிழினத்தின் லட்சிய பயணத்தில், நம் கால்கள் பாதை மாறக்கூடாது, நம் தலை யாரிடமும் எதற்காகவும் தாழக் கூடாது. சூழ்ந்து வரும் சூழ்ச்சிகளை அறிவுத்திறத்தால் – நாம் அனைவரும் ஒன்றிணைந்து முறியடித்திட வேண்டும். இதற்காக என்னை இன்னும் முழுமையாக ஒப்படைத்துக் கொள்வேன். இதுவே என் பிறந்தநாள் உறுதிமொழி.

தந்தை பெரியார், பேரறிஞர் அண்ணா, முத்தமிழறிஞர் கலைஞர் ஆகியோர் நமக்குக் காட்டிய பாதையில், தமிழ்நாடு போராடும் தமிழ்நாடு வெல்லும் என்ற போர்க்குணத்தோடு பயணித்து "ஒன்றாக வெல்வோம்" என பதிவிட்டுள்ளார்.

# கமேனி மரணம்: கராச்சியில் அமெரிக்க துணை தூதரகத்தின் மீது தாக்குதல் 8 பேர் உயிரிழப்பு



கராச்சி: அமெரிக்கா மற்றும் இஸ்ரேல் படைகளின் கூட்டுத் தாக்குதலில் ஈரானின் உச்ச தலைவர் கமேனி உயிரிழந்தைக் கண்டித்து, பாகிஸ்தானின் கராச்சியில் உள்ள அமெரிக்க துணைத்தூதரகம் சூறையாடப்பட்டது. அப்போது போராட்டக்காரர்களுக்கும் பாதுகாப்புப் படையினருக்கும் இடையே நடந்த மோதலில் 8 பேர் உயிரிழந்தனர். 20 பேர் காயமடைந்தனர்.

அந்நாட்டின் துறைமுக நகரமான கராச்சியில் அமெரிக்க துணைத்தூதரகம் செயல்பட்டு வருகிறது. கமேனியின் மரணம் உறுதி செய்யப்பட்டதை தொடர்ந்து (மார்ச் 1) அந்நாட்டை சேர்ந்த நூற்றுக்கணக்கான போராட்டக்காரர்கள், கராச்சியில் உள்ள அமெரிக்க தூதரகத்தை முற்றுகையிட்டனர். அப்போது போராட்டக்காரர்களில் சிலர் துணைத்தூதரகத்தின் ஜன்னல்களை அடித்து நொறுக்கினர்.

நாம் ஒற்றுமையாக இருக்க வேண்டும். எந்த சக்தியாலும் நம்மைத் தடுக்க முடியாது. நாங்கள் கராச்சியில் உள்ள அமெரிக்க துணைத் தூதரகத்தை தீக்கிரை ஆக்குவோம். எங்கள் தலைவரின் கொலைக்கு நாங்கள் பழி தீர்ப்போம்" என்று போராட்டத்தில் ஈடுபட்ட இளைஞர்கள் தெரிவித்தனர். இந்த காட்சிகள் சமூக வலைதளத்தில் வீடியோவாக வெளியாகி உள்ளன.

அப்போது போராட்டக்காரர்கள் மற்றும் பாதுகாப்பு பணியில் ஈடுபட்ட பாதுகாப்பு படையினருக்கு இடையில் ஏற்பட்ட மோதலில் 8 பேர் உயிரிழந்தனர், 20 பேர் காயமடைந்தனர். இதை பாகிஸ்தானை சேர்ந்த காவல் அதிகாரி முகமது ஜவாத் உறுதி செய்துள்ளார்.

கமேனி மரணத்தை அடுத்து பாகிஸ்தானின் பல்வேறு நகரங்களில் மக்கள் வீதியில் இறங்கி போராட்டத்தில் ஈடுபட்டதாக தகவல்கள் தெரிவிக்கின்றன. இஸ்லாமாபாத்தில் உள்ள அமெரிக்க தூதரகத்தை முற்றுகையிட அவர்கள் முடிவு செய்துள்ளதால் அங்கு பாதுகாப்பு பலப்படுத்தப்பட்டுள்ளது.

இந்தியாவில் நிலை என்ன? - கமேனி மரணத்தை தொடர்ந்து தலைநகர் டெல்லியில் உள்ள ஈரான் தூதரகத்தில் அமைக்கப்பட்டுள்ள கொடிக்கம்பத்தில் அந்நாட்டின் கொடி அரைக்கம்பத்தில் பறக்க விடப்பட்டுள்ளது. காஷ்மீரில் பல இடங்களில் கமேனி மரணத்தை கண்டித்து மக்கள் வீதியில் அறவழி போராட்டத்தில் ஈடுபட்டனர். அப்போது கமேனிக்கு அவர்கள் அஞ்சலி செலுத்தினர்.

சென்னையில் உள்ள அமெரிக்க துணைத்தூதரகம் முன்பு இஸ்லாமிய அமைப்புகளைச் சேர்ந்தவர்கள் முற்றுகை போராட்டத்தில் ஈடுபட்டனர். இதில் தமிமுன் அன்சாரி, கருணாஸ் மற்றும் தனியரசு உள்ளிட்டோர் பங்கேற்றனர். இந்த போராட்டத்தில் 500-க்கும் மேற்பட்டோர் பங்கேற்றனர்.

**செய்திகள்**

**உடனுக்குடன் படிக்க**

தினத்தளம்

DHINATH DHALAM

**வாட்ஸ் அப் குரூப்பில்**

**இணையுங்கள்**



Join my WhatsApp group.
https://chat.whatsapp.com/
CgGZM7snNtZ0QMr6or5zVx?mode=wwt

### உளுந்தூர்பேட்டை அருகே உள்ள பாலி பகுதியில் அமைந்துள்ள

# ஜவஹர்லால் நேரு கல்லூரியில் இந்தியன் வங்கியின் தானியங்கி பண பரிமாற்ற இயந்திரம்(ATM) திறப்பு விழா

கள்ளக்குறிச்சி மாவட்டம் உளுந்தூர்பேட்டை அருகே உள்ள பாலி பகுதியில் அமைந்துள்ள ஜவஹர்லால் நேரு கல்லூரியில் இந்தியன் வங்கியின் தானியங்கி பண பரிமாற்ற இயந்திரம்(ATM) திறப்பு விழா நிகழ்வு நடைபெற்றது.இந்நிகழ்வின்திறப்பு விழாவினை கல்லூரியின் தாளாளர் டாக்டர் கேஜெயராமன்தலைமை தாங்கினார். சாரதா கல்லூரியின் அம்பா அமயப்ரியா, பிரேமப்பிரண மாஜி ஆகியோர் கலந்து கொண்டு வாழ்த்துரை வழங்கினர். ஏடிஎம் மிஷினை பத்தாம் படை காவலர் பயிற்சியின் Deputy commandant திரு.சந்திர மோகன் மற்றும் இந்தியன் வங்கியின் கடலூர் மண்டலதுணைமண்டல மேலாளர் /உதவி பொது மேலாளர் திரு. M. பாலமுருகன். ஆகியோர்கள் திறந்து வைத்தனர். இந்நிகழ்ச்சியில் கல்லூரியின் செயலாளர் டாக்டர் JSA அருண், நிர்வாக செயலாளர் டாக்டர் கண்மணி நிர்வாக இயக்குநர் மகேஸ்வரன், கள்ளக்குறிச்சி மாவட்ட முன்னோடி வங்கி மேலாளர் திரு. ரஞ்சித், உளுந்தூர்பேட்டை இந்தியன் வங்கி கிளை மேலாளர் P. தியாக ராஜன், மண்டல அலுவலர்கள் திரு குணா மற்றும் அரவிந்த், உளுந்தூர்பேட்டை சுற்றி உள்ள இந்தியன் வங்கியின் கிளை மேலாளர்கள் ஆன பிரதாப் ,மனோ (எளவனாசூர்கோட்டை), நவீன் (சேந்தநாடு) மற்றும் முதல்வர் பிருந்தா மற்றும் கல்லூரியின் முன்னாள் இயக்குநர் நடராஜன் அவர்களும் தீயணைப்புப் படை காவலர்கள், பாலி ஊராட்சி மன்ற தலைவர், கல்லூரி பேராசிரியர்கள் உளுந்தூர்பேட்டை இந்தியன் வங்கி கிளையின் ஊழியர்கள், மாணவர்கள் பொதுமக்கள் என அனைவரும் கலந்து கொண்டு விழாவினை சிறப்பித்தனர்.





திமுக தலைவரும் தமிழ்நாடு முதலமைச்சருமான மு.க.ஸ்டாலின் பிறந்தநாள் விழா தமிழக முழுவதும் கொண்டாடப்பட்டு வருகிறது இதன் ஒரு பகுதியாக கள்ளக்குறிச்சி மாவட்டம் உளுந்தூர்பேட்டை பேருந்து நிலையத்தில் ஒன்றிய நகர திமுகவின் சார்பில் பொதுமக்களுக்குகாலைசிற்றுண்டிவழங்கும்நிகழ்ச்சிநடைபெற்றதுஒன்றியசெயலாளர் வைத்தியநாதன் நகர செயலாளர் பொதுமக்களுக்கு காலை சிற்றுண்டிகளை வழங்கி முதலமைச்சரின் பிறந்தநாள் விழாவை கொண்டாடினர்....

### கிராம நிர்வாக அலுவலர் மற்றும் வருவாய் துறை ஊழியர்களுக்கு

# பாதுகாப்பு இல்லாத சூழ்நிலை இருப்பதால் உடனடியாக பணி பாதுகாப்பு சட்டத்தை நிறைவேற்ற வேண்டும்

## தமிழ்நாடு கிராம நிர்வாக அலுவலர் சங்க மாநில பொதுச்செயலாளர் கோரிக்கை

தூத்துக்குடியில் தமிழ்நாடு கிராம நிர்வாக அலுவலர் சங்கம் மாவட்ட பொதுக்குழு கூட்டம் இன்று 9000 கிராம நிர்வாக அலுவலர்கள் இந்தப் போராட்டத்தில் ஈடுபட்டு வருகின்றனர்.கிராமநிர்வாக அலுவலர்களுக்கு யம் வழங்க நடவடிக்கை எடுக்க வேண்டும் கருணை அடிப்படையில் ஆன பணி நியமனத்தை 25 சதவீதமாக உயர்த்த




தூத்துக்குடியில் நடைபெற்றது கிராம நிர்வாக அலுவலர் சங்க மாநில பொதுச் செயலாளர் குமார் மற்றும் மாநிலத் தலைவர்சசிகுமார் ஆகியோர் தலைமையில் நடைபெற்றது. இதில் ஏராளமான கிராம நிர்வாக அலுவலர்கள் பங்கேற்றனர்.

கூட்டத்தில் போராட்டத்தைவிரப்படுத்துவது குறித்து ஆலோசனை மேற்கொள்ளப்பட்டது இதைத் தொடர்ந்து மாநிலபொதுச்செயலாளர் குமார் கூறுகையில்: கிராம நிர்வாக அலுவலர் சங்கத்தினர் வருவாய்த்துறை கூட்டமைப்பு சார்பில் தொடர்ந்து தங்களது கோரிக்கைகளை வலியுறுத்தி போராட்டத்தில் ஈடுபட்டு வருகின்றனர். தமிழகம் முழுவதும் மற்றும் வருவாய் துறை ஊழியர்களுக்கு பணியின் போது பாதுகாப்பு இல்லாத சூழ்நிலை மற்றும் மணல் கொள்ளையர்கள் தாக்குதல் காரணமாக கிராம நிர்வாக அலுவலர்கள் உயிரிழப்பு ஏற்படும் சூழ்நிலை உருவாகியுள்ளது எனவே உடனடியாக தமிழக அரசு பணி பாதுகாப்பு சட்டத்தை நிறைவேற்ற வேண்டும்.

மேலும் தமிழக அரசு கிராம நிர்வாக அலுவலர் பணியிடங்களுக்கு தேர்வு செய்யும் போது கல்வி தகுதியை பட்டப்படிப்பாக உயர்த்த வேண்டும் கிராம நிர்வாக அலுவலர்கள் 24 மணி நேரமும் வேலை செய்யக்கூடிய சூழ்நிலை ஏற்பட்டுள்ளதால் மேம்படுத்தப்பட்ட ஊதியம் வழங்க நடவடிக்கை எடுக்க வேண்டும் என்பது உள்ளிட்ட கோரிக்கைகளை வலியுறுத்தி கடந்த 24 ஆம் தேதி முதல் தொடர்ந்து போராட்டம் நடத்தி வரும் நிலையில் தமிழக அரசு உடனடியாக தங்களது கோரிக்கைகளை நிறைவேற்ற நடவடிக்கை எடுக்க வேண்டும். தொடர்ந்து போராட்டத்தில் ஈடுபட்டு வரும் கிராம நிர்வாக அலுவலர் சங்கம் மற்றும் வருவாய்த்துறை ஊழியர் கூட்டமைப்பை அழைத்துப் பேசி நடவடிக்கை எடுக்க வேண்டும் என கோரிக்கை விடுத்தனர் இல்லையென்றால் தொடர்ந்து போராட்டங்கள் ஈடுபட்டு வருவோம் இதன் காரணமாக பொதுமக்களின் பணிகள் பாதிக்கப்படும் சூழ்நிலை ஏற்படும் என்று தெரிவித்தார்.



### தூத்துக்குடி மாநகராட்சி சிவந்தாகுளம் நடுநிலைப்பள்ளியில் சாதனை படைத்த

# மாணவ மாணவிகளுக்கு மேயர் ஜெகன் பெரியசாமி சான்றிதழ்கள் பதக்கங்களை வழங்கி பாராட்டினார்

தூத்துக்குடி மாநகராட்சி சிவந்தா குளம் பகுதியில் மாநகராட்சி நடுநிலைப்பள்ளியில் ஆண்டுக்கான விளையாட்டு விழா பள்ளி வளாகத்தில் நடைபெற்றது.

நிகழ்ச்சியில் தூத்துக்குடி மாநகராட்சி மேயர் ஜெகன் பெரியசாமி கலந்து கொண்டு மாணவ மாணவிகளுக்கான பல்வேறு போட்டிகளில் வெற்றி பெற்றவர்களுக்கு பரிசுகளையும் சான்றிதழ்களையும் பதக்கங்களையும்வழங்கினார். பள்ளி தலை ஆசிரியர் எமல்டா வெலன்சி யா ஹெப்ஸிபா வரவேற்புரையாற்றினார். விழாவில் விளையாட்டு ஜோதியை மேயர் ஜெகன் பெரியசாமி ஏற்றி வைத்து போட்டிகளில் வெற்றி பெற்றவர்களுக்கு பரிசு வழங்கி பேசுகையில்: அரசு பள்ளியாக இருந்து இந்த பள்ளி மாநகராட்சி வசம் வந்தபின்பு பல்வேறு கட்டமைப்புகளை உருவாக்கி கொடுத்துள்ளோம் பள்ளிக்கு வரும் மாணவ மாணவிகளின் எண்ணிக்கையும் அதிகரித்துள்ளது.

இந்த பள்ளியின் வளர்ச்சிக்கு தலைமை ஆசிரியையின் பங்கும் அதிகம் ஒவ்வொருவருக்கும் உடல்ஆரோக்கியம் முக்கியம் நான் 1989ல் பள்ளியில் படிக்கின்ற காலத்தில் தமிழ்வழிக்கல்வியை படித்த போது கொஞ்சம் விளையாட்டு பிள்ளையாக தான் இருந்தேன் ஆனால் கால போக்கில் தான் படிப்பின் அருமை என்னவென்று தெரிந்தது. அதனால் அனைவரும் பள்ளி பருவத்தை நல்ல முறையில் பயன்படுத்திக்கொண்டு உங்களுடைய பெற்றோர்கள் ஆசிரியர்கள் சொல்லை கேட்டு படிக்கவேண்டும்விலை தான் யாரும் விலை கொடுத்து வாங்க முடியாத மிகப்பெரிய சொத்தாகும். தமிழக முதலமைச்சர் பள்ளி கல்விக்கென்று பல்வேறு உதவிகளை செய்து வருகிறார். அதே போல் தனியார் பள்ளிகளுக்கு ஈடாக மாநகராட்சி பள்ளிகளின் தரமும் அதற்கேற்றாற் போல் இருக்க வேண்டும் என்று எல்லா வகையிலும் உதவிகளை செய்து வருகிறோம். தனியார் பங்களிப்பின் மூலமும் புதிய பள்ளி கட்டிடங்கள் உருவாக்கப்பட்டுள்ளது. உங்களது கனவுகளை நனவாக்க அனைவரும் நல்ல பழக்க வழக்கத்துடன் எதிர்கால சிந்தனைகளை உருவாக்கி உலகம் முழுவதும் தமிழின் பெருமையை நிலை நாட்டும் வகையில் உங்கள் வாழ்க்கையை அமைத்து கொள்ள வேண்டும் என்று பேசினார்

விழா நிகழ்ச்சியில் தமிழன்டா கலைக்குழு தலைவர் ஜெகஜீவன், கவுன்சிலர் முத்துமாரி, முன்னாள் மாணவர் அண்ணாத்துரை, உள்பட ஆசிரியர்கள் பெற்றோர்கள் மாணவ மாணவிகள் கலந்து கொண்டனர்.

# திமுக நகர் கழக செயலாளர் தலைமையில் முதலமைச்சர் ஸ்டாலினின் 73வது பிறந்தநாள் விழா



சிவகங்கை மாவட்டம் மானாமதுரைநகர்திமுக சார்பாக மாண்புமிகு தமிழக முதல்வரும் திமுகவின் தலைவருமானதிருமு.க.ஸ்டாலின் அவர்களின் 73 வது பிறந்தநாளைமுன்னிட்டு பழைய பேருந்து நிலையம் முதல் அண்ணா சிலை, காந்தி சிலை, தேவர் சிலை, நகராட்சி சந்தை கடை வழியாக, கன்னார் தெரு வரை வார்டு பகுதிகளில் உள்ள பொதுமக்கள் மற்றும் கட்சியினருக்கு நகர் கழக செயலாளர் க. பொன்னுச்சாமி அவர்களின் தலைமையில் இனிப்புகள் வழங்கி கொண்டாடப்பட்டது.

தலைமை பொதுக்குழு உறுப்பினர் ராஜாங்கம், நகர் மன்ற துணைத் தலைவரும் நகர் கழகத் துணைச் செயலாளருமான பாலசுந்தரம், நகர் அவைத்தலைவர் ரவிச்சந்திரன், மாவட்ட விளையாட்டு மேம்பாட்டு அணி துணை அமைப்பாளர் அதியமான், நகரத் தொண்டரணி அமைப்பாளர் ராஜேஷ், நகர் கழகத் துணைச் செயலாளர் மன்னர் மன்னன், நகர்மன்ற உறுப்பினர் காளீஸ்வரி, நகர் மன்ற உறுப்பினரும் நகர் மகளிர் தொண்டர் அணி அமைப்பாளர் சித்ரா மன்னர் மன்னன், 4வது வார்டு செயலாளர் கார்த்தி, 1வது வார்டு செயலாளர் விஜயகுமார் உள்ளிட்ட கட்சியின் நிர்வாகிகள் தொண்டர்கள் மற்றும் பொதுமக்கள் கலந்து கொண்டனர்.



செங்கல்பட்டு மாவட்டம் மதுராந்தகம் சட்டமன்றத் தொகுதிக்கு உட்பட்ட வையாவூர் ஊராட்சியை சார்ந்த க.மணிகண்டன் திராவிட முன்னேற்றக் கழகத்தின் காஞ்சிபுரம் தெற்கு மாவட்ட பொறியாளர் அணி துணை அமைப்பாளர் இவர்கள் சென்னையில் அமைந்துள்ள திமுக தலைமை கழகம் அண்ணா அறிவாலயத்தில் எதிர்வரும் சட்டமன்றத் தேர்தலில் மதுராந்தகம் தனி தொகுதியில் போட்டியிட விருப்ப மனு மற்றும் கட்டணத் தொகையாக ரூபாய் 15 ஆயிரம் செலுத்தி மனு தாக்கல் செய்தார் அருகில் திமுக கழக நிர்வாகிகள் உள்ளனர்



# நாகர்கோவில்:வடசேரி பேருந்து நிலையத்தில் நேர குறிப்பாளர் பற்றாக்குறை; பயணிகள் அவதி

வடசேரி பேருந்து நிலையத்தில் போதுமான நேர குறிப்பாளர்கள் இல்லாததால் பேருந்துகள் திட்டமிட்ட நேரத்தில் இயக்கப்படாத நிலை ஏற்பட்டுள்ளது. நடத்துனர்கள் நீண்ட நேரம் காத்திருக்க வேண்டிய சூழல் உருவாகியுள்ளது.

இதனால் ஓட்டுநர்கள், நடத்துனர்கள் சிரமம் அனுபவிக்கின்றனர். குறிப்பிட்ட நேரத்தில் பயணம் செய்ய முடியாமல் பொதுமக்களும் அவதிப்படுகின்றனர். உடனடியாக போதுமான நேர குறிப்பாளர்களை நியமிக்க நிர்வாகம் நடவடிக்கை எடுக்க வேண்டும் என்ற கோரிக்கை எழுந்துள்ளது.

# இளையான்குடி புதிய குப்பை கிடங்கு தேர்வு செய்யப்பட்ட இடத்திற்கு பொதுமக்கள் எதிர்ப்பு தெரிவித்து முற்றுகை போராட்டம் அறிவிப்பு




சிவகங்கைமாவட்டம் இளையான்குடியில் விவசாய நீர் பாசனத்திற்கு ஆதாரமாக விளங்கும் இளையான்குடி பெரிய கண்மாய்க்கு செல்லும் வழித்தட பகுதிக்கு மிக அருகில், சுற்றுச்சூழல் மாசு மற்றும் கேடு விளைவிக்கும் வகையில் குப்பை கிடங்கிருக்கு தேர்வு செய்யப்பட்டுள்ள இடத்திற்கு எதிர்ப்பு தெரிவித்து கொ.இடையவலசை ஊராட்சி, நகரகுடி ஊராட்சி, அ.மெய்யனேந்தல் ஊராட்சிகளை சேர்ந்த கிராம விவசாய பொதுமக்கள், தியாகி இமானுவேல் பேரவையினர் , ஜனநாயக சக்திகள், பொதுமக்கள், சமூக உரிமைப் போராளிகள் மற்றும் சுற்றுச்சூழல் ஆர்வலர்கள் உள்ளிட்டோர் எதிர்வரும் மார்ச் 4ஆம் தேதியன்று திரண்டு பேரணியாகப் புறப்பட்டு இளையான்குடிபேரூராட்சிஅலுவலகத்தைமுற்றுகை யிட்டுதங்கள் உணர்வுகளையும்,கோரிக்கைகளையும் அறவழியில் வெளிப்படுத்தப் போவதாக தெரிவித்து உள்ளனர்.

### அச்சிறுப்பாக்கம் அருகே

# த.வெ.க கட்சியில் இருந்து தி.மு.க.வில் 50க்கும் மேற்பட்டோர் இணைந்தனர்



செங்கல்பட்டு மாவட்டம் மதுராந்தகம் சட்டமன்ற தொகுதிக்கு உட்பட்ட அச்சிறுப்பாக்கம் தெற்கு ஒன்றியம் சார்பில் ஒரத்தி ஊராட்சியில் மாண்புமிகு தமிழக முதல்வர் முத்துவேல் கருணாநிதி மு.க.ஸ்டாலின் அவர்களின் 73வது பிறந்த நாளை முன்னிட்டுநடைபெற்றநிகழ்ச்சியில்அச்சிறுப்பாக்கம் ஒன்றிய குழு பெருந்தலைவர் ஒரத்தி. கே.கண்ணன் முன்னிலையில் தமிழக வெற்றி கழகம் கட்சியில் இருந்து ராஜ்குமார் கன்னியப்பன் சேது பிரசாத் சந்தோஷ் வினோத் கார்த்திக் தேவா ஹரிஷ் விக்கி சதீஷ் சிவகுமார் வெங்கடேச பெருமாள் கோகுல் சரத் வெங்கடேசன் வினோத் உள்ளிட்ட சுமார் 50க்கும் மேற்பட்டோர் திராவிட முன்னேற்றக் கழகத்தில் இணைந்தனர் இவர்களுக்கு சால்வை அணிவித்து கட்சியின் அடையாள அட்டை வழங்கி வரவேற்றனர் ஒரத்தி ஊராட்சி மன்ற முன்னாள் தலைவர் ஓ.பி.சிமாறன்,ஒன்றிய.கவுன்சிலர்அனந்தமங்கலம் பாலசுப்பிரமணியம் மாவட்ட விளையாட்டு மேம்பாட்டு அணி துணை அமைப்பாளர் வினோத்குமார்,தெற்கு ஒன்றிய இளைஞரணி அமைப்பாளர்பிரகாஷ்,ராஜசேகர்,மகளிரணியினர் உள்ளிட்ட நூற்றுக்கும் மேற்பட்டோர் கலந்து கொண்டனர்.



ஈரோடுதெற்குமாவட்டம்,கோட்டைபகுதிநெசவாளர் அணி சார்பில் தமிழக முதலமைச்சர் மு.க.ஸ்டாலின் அவர்களின் பிறந்தநாளை முன்னிட்டு பொதுமக்களுக்கு இனிப்புகள் வழங்கும் நிகழ்ச்சி நடைபெற்றது. திமுக முன்னாள் இளைஞர் அணி மாநகர அமைப்பாளர் கோட்டைபா.ராமுதலைமைதாங்கினார்.இதில்கோட்டை பகுதி இளைஞரணி அமைப்பாளர் ஹரி பிரசாந்த், முன்னாள் கவுன்சிலர் பாஸ்கி (எ) பாஸ்கரன், கோட்டை பகுதிதுணைச்செயலாளர்பாலசுந்தரம்,நெசவாளர்அணி அமைப்பாளர் ஜெ.மோகனசுந்தரம், பகுதி பிரதிநிதிகள் வேலுமணி, மீனாட்சி, மாவட்ட மகளிர் அணி துணை அமைப்பாளர் பிரியா மூர்த்தி, 37வது வார்டு முன்னாள் பிரதிநிதி மூர்த்தி, 35வது வார்டு பிரதிநிதி மணிகண்டன், பிரசன்னாமற்றும்திமுக பிரமுகர்காமராஜ் உள்ளிட்ட பலர் கலந்து கொண்டனர்.



## முதலமைச்சர் மு.க.ஸ்டாலின் பிறந்தநாளை முன்னிட்டு அமைச்சர் கீதாஜீவன் நேரில் சந்தித்து வாழ்த்து தெரிவித்தார்

தமிழக முதலமைச்சர் மற்றும் திராவிட முன்னேற்றக் கழகத்தின் தலைவர் மு.க.ஸ்டாலின் பிறந்தநாளை முன்னிட்டு, தமிழகம் முழுவதும் திமுகவினர் உற்சாகமாகக் கொண்டாடி வருகின்றனர்.

இதன் ஒரு பகுதியாக, இன்று சென்னையில் முதலமைச்சரை நேரில் சந்தித்த சமூகநலன் மற்றும் மகளிர் உரிமைத் துறைஅமைச்சர்திருமதி பி.கீதா ஜீவன், தனது வாழ்த்துகளைத் தெரிவித்தார்.

சென்னை ஆழ்வார்பேட்டையில் உள்ள முதல்வரின் இல்லத்தில் இந்த சந்திப்பு நடைபெற்றது. அப்போது அமைச்சருடன் முக்கிய கட்சி நிர்வாகிகளும் உடனிருந்தனர்.தமிழக அரசின் சாதனைத் திட்டங்கள் மற்றும் மகளிர் நல மேம்பாட்டிற்காகமுதல்வர்எடுத்து வரும் முயற்சிகளுக்கு நன்றி தெரிவிக்கும் வகையில், அமைச்சர் அவருக்கு மலர்க்கொத்து மற்றும் நினைவுப் பரிசுகளை வழங்கினார்.

அமைச்சரின் சொந்த மாவட்டமான தூத்துக்குடியிலும் முதல்வரின் பிறந்த நாளை முன்னிட்டு பல்வேறு நலத்திட்ட உதவிகள் வழங்கும் நிகழ்ச்சிகளுக்கு ஏற்பாடு செய்யப்பட்டுள்ளது.ஏழைஎளிய மக்களுக்கு உணவு வழங்குதல், இனிப்பு வழங்குதல் மற்றும் மரக்கன்றுகள் நடுதல் போன்ற ஆக்கப்பூர்வமான பணிகளில் தொண்டர்கள் ஈடுபட்டு வருகின்றனர்.

### முதலமைச்சர் மு.க.ஸ்டாலின் பிறந்தநாள் விழா

## தூத்துக்குடி தெற்கு மாவட்ட திமுகவினர் 500பேருக்கு பிரியாணி வழங்கி கொண்டாட்டம்



திமுகதலைவர்,தமிழ்நாடு முதலமைச்சர் மு.க.ஸ்டாலின் 73வது பிறந்தநாளைமுன்னிட்டு தூத்துக்குடி தெற்கு மாவட்ட திமுக செயலாளர் அமைச்சர் அனிதா ராதாகிருஷ்ணன் வழிகாட்டுதல்படி, ஒட்டபிடாரம் சட்டமன்ற உறுப்பினர் எம்.சி. சண்முகையா ஆலோசனையின் பேரில் தெற்கு மாவட்ட திமுக ஆதி திராவிடர் நல அணி மாவட்ட அமைப்பாளர் டி.டி.சி.ராஜேந்திரன் தலைமையில், 3வது வார்டு மாமன்ற உறுப்பினர் ரெங்கசாமி முன்னிலையில் தூத்துக்குடி ஹவுசிங்போர்டு பகுதியில் முதலமைச்சர் பிறந்தநாள் விழாவில் கேக் வெட்டி பொதுமக்கள் 500பேருக்கு அறுசுவை பிரியாணி வழங்கினர்.

நிகழ்ச்சியில் தூத்துக்குடி கிழக்கு ஒன்றிய திமுக துணை செயலாளர் கணேசன், மாவட்ட வர்த்தகர் அணி பிளோமின்ராஜ்,

தெற்கு மாவட்ட இளைஞரணி துணை அமைப்பாளர் வழக்கறிஞர் பால்துரை, ஒன்றிய இளைஞரணி அருன் பாரி, விவசாய அணி ராஜ்குமார், கென்னடி மற்றும் இந்திரா நகர் பகுதி நிர்வாகிகள், தூத்துக்குடி கிழக்கு ஒன்றிய திமுகவினர் சார்பு அணி நிர்வாகிகள் பொதுமக்கள் உட்பட பலர் கலந்து கொண்டனர்.

## அச்சிறுப்பாக்கம் தெற்கு ஒன்றியம் சார்பில் முதலமைச்சர் ஸ்டாலின் பிறந்தநாள் விழா



செங்கல்பட்டு மாவட்டம் மதுராந்தகம் சட்டமன்ற தொகுதிக்கு உட்பட்ட அச்சிறுப்பாக்கம் தெற்கு ஒன்றியம் சார்பில் ஒரத்தி ஊராட்சியில் மாண்புமிகு தமிழக முதல்வர் முத்துவேல் கருணாநிதி மு.க.ஸ்டாலின் அவர்களின் 73வது பிறந்த நாளை முன்னிட்டு அச்சிறுப்பாக்கம் ஒன்றிய குழு பெருந்தலைவர் ஒரத்தி. கே.கண்ணன் தலைமையில் பேருந்து நிலையம் அருகே பிறந்த நாள் விழா முழக்கமிட்டு பொதுமக்களுக்கு இனிப்பு வழங்கி அறுசுவை பிரியாணி வழங்கப்பட்டது இந்நிகழ்ச்சியில் ஒரத்தி ஊராட்சி மன்ற முன்னாள் தலைவர்

ஓ.பி.சிமாறன்,ஒன்றிய. கவுன்சிலர் அனந்தமங்கலம் பாலசுப்பிரமணியம் மாவட்ட விளையாட்டுமேம்பாட்டுஅணி துணை அமைப்பாளர் வினோத்குமார்.தெற்கு ஒன்றிய இளைஞரணி அமைப்பாளர் பிரகாஷ். ராஜசேகர்.மகளிர் அணியினர் உள்ளிட்ட நூற்றுக்கும் மேற்பட்டோர் கலந்து கொண்டனர்

## தமிழக முற்போக்கு மக்கள் கட்சி சார்பாக கோவை பந்தயசாலையில் கன்டன ஆர்ப்பாட்டம்

### பல்வேறு கோரிக்கைகளை முன்வைத்து தமிழக அரசை வலியுறுத்தி நடைபெற்றது

தமிழக முற்போக்கு மக்கள் கட்சியின் சார்பாக பல்வேறு கோரிக்கைகளை முன்வைத்து பந்தயசாலையில் உள்ள




தெற்கு வட்டாட்சியர் அலுவலகம் முன்பாக கன்டன ஆர்ப்பாட்டம் நடைபெற்றது. இந்த ஆர்ப்பாட்டத்தில் இக்கட்சியின் மாநில தலைவர் வழக்கறிஞர் சக்தி வேல் கலந்து கொண்டு சிறப்புரையாற்றினார்.

இந்த ஆர்ப்பாட்டத்தை, தமிழக முற்போக்கு மக்கள் கட்சியின் மாநில துணை தலைவரும் வழக்கறிஞருமான புஸ்பாணந்தம் தலைமை தாங்கினார். இந்த ஆர்ப்பாட்டத்தின் வாயிலாக கோவை மாநகராட்சியில் உள்ள ஐந்து மண்டலங்களிலும் பணிபுரியும் ஒப்பந்த தூய்மை பணியாளர்கள் 3500 வரை, பணி நிரந்தரம் செய்யப்பட வேண்டும் எனவும், தாட்கோ அலுவலகம் மூலம் எஸ்.சி மற்றும் எஸ்டி மக்களுக்கு தேசிய மயமாக்கப்பட்ட வங்கிகளில் காலதாமதம் இல்லாமல் கடன் வழங்க வேண்டும் எனவும்,தமிழகம் முழுவதும் உள்ள ஒன்றே முக்கால் கோடி தேவேந்திர குல வேளாளர் வேளாளர் சமூக மக்களை,எஸ்.சி பட்டியலில் இருந்து பிசி அல்லது எம்.பி.சி பட்டியில் சேர்க்கப்பட வேண்டும் எனவும், கோவை செல்வபுரத்தில் உள்ள தமிழ்நாடு நகர்புற வாழ்விட மேம்பாட்டு வாரியம் அலுவலகத்தில், நடைபெறும் முறைகேடுகள் குறித்து உரிய நடவடிக்கை எடுக்க வேண்டும், இதில் தகுதியானவர்களுக்கு உடனடியாக அடுக்குமாடி குடியிருப்பு வீடுகளை ஒதுக்கீடு செய்ய வேண்டும் எனவும், கோவை மாவட்டத்தில் தாழ்த்தப்பட்ட மற்றும் பிற்படுத்தப்பட்ட மக்களுக்கு அரசின் மூலம் பட்டா வழங்கப்பட்டுள்ளது ஆனால், இன்று வரை அதற்கான இடத்தைஅளவீடுசெய்து தரப்படவில்லை எனவும், அவர்களுக்கு உடனுக்குடன் அவர்களது இடங்களை அளவீடு செய்து தரவேண்டும், கோவை நீதிமன்றவளாகம் முன்பு சட்ட மாமேதை டாக்டர் அம்பேத்கர் அவருக்கு முழு வெண்கல சிலை அமைத்து தரப்பட வேண்டும் என என்பது, உள்ளிட்ட பல்வேறு கோரிக்கைகளை முன்வைத்து கண்டன ஆர்ப்பாட்டத்தில் நடைபெற்றது. இதில் சமூக ஆர்வலர் நாகேந்திரன், இந்திரன் இதழ் ஆசிரியர் உலகநாதன், செட்டி அசோக்பண்ணாடி,திருநெல்வேலி பாக்கியமுத்து, மகேஸ்வரன், ராம்மோகன்,எஸ்சி எஸ்டி நலக்குழு உறுப்பினர்கள்,சந்திரன்,சுந்தர்ராஜ், சிவராமன், டாஸ்மாக் தொழிற்சங்க தலைவர் மணிமாறன்,அக்பர்ஷெரிப், மாதவன், செந்தில், ராஜ்குமார், கோமதி, நாராயணன், உள்ளிட்ட பலர் கலந்து கொண்டனர் என்பது குறிப்பிடத்தக்கது.

## தொழுப்பேடு ஊராட்சியில் நியாயவிலை கடையை ஒன்றியகுழு பெருந்தலைவர் ஒரத்தி.கே.கண்ணன் திறந்து வைத்தார்



செங்கல்பட்டு மாவட்டம் மதுராந்தகம் சட்டமன்ற தொகுதிக்கு உட்பட்ட அச்சிறுப்பாக்கம் தெற்கு ஒன்றியம் சார்பில் தொழுப்பேடு ஊராட்சியில் மாண்புமிகு தமிழக முதல்வர் முத்துவேல் கருணாநிதி மு.க.ஸ்டாலின் அவர்களின் 73வது பிறந்த நாளை முன்னிட்டு அச்சிறுப்பாக்கம் ஒன்றிய குழு பெருந்தலைவர் ஒரத்தி. கே.கண்ணன் தலைமையில் தொழுப்பேடு ஊராட்சியில் அமைநைதுள்ள நியாய விலை கடை விற்பனையை துவைக்க வைத்து பிறந்த நாள் விழா முழக்கமிட்டு பொதுமக்களுக்கு இனிப்பு வழங்கி அறுசுவை பிரியாணி வழங்கப்பட்டது.

இந்நிகழ்ச்சியில் ஆதிதிராவிட நலக்குழு மாவட்ட அமைப்பாளர் சிவக்குமார் அச்சிறுப்பாக்கம் தெற்கு ஒன்றிய இளைஞரணி அமைப்பாளர் பிரகாஷ் மின்னல் சித்தாமூர் ஊராட்சி மன்ற தலைவர் வழக்கறிஞர் பாலாஜி சிறுபேர்பாண்டிஊராட்சி மன்ற தலைவர் சுதாகர். தெற்கு ஒன்றிய இளைஞரணி அமைப்பாளர் .மகளிர் அணியினர் உள்ளிட்ட நூற்றுக்கும் மேற்பட்டோர் கலந்து கொண்டனர்



## திட்டக்குடியில் யாதவ அரசியல் விழிப்புணர்வு மாபெரும் பொதுக்கூட்டம்:

### அரசியல் அங்கீகாரம் மற்றும் இடஒதுக்கீடுகோரி தீர்மானம்

கடலூர்மாவட்டம்திட்டக்குடி தேரடிவீதியில்திட்டக்குடி -வேப்பூர்யாதவநலச்சங்கம்சார்பில்'திட்டக்குடி தொகுதி யாதவஅரசியல்விழிப்புணர்வுமாபெரும்பொதுக்கூட்டம்' கடலூர் மேற்கு மாவட்ட ஒருங்கிணைப்பு குழு தலைவர் மணிகண்டன் தலைமையில் எழுச்சியுடன் நடைபெற்றது. சங்கத்தின் பொருளாளர் தமிழ் குடிமகன் வரவேற்புரையாற்ற, தலைவர் நீலமேகம் மற்றும் கௌரவத் தலைவர் விஜயன் ஆகியோர் முன்னிலை வகித்தனர்.

இக்கூட்டத்தில் சிறப்பு அழைப்பாளர்களாக மெகா டிவி 'அமுத கானம்' புகழ் இயக்குனர் எல்.வி. ஆதவன் மற்றும் அகில இந்திய யாதவ மகாசபையின் கோகுலம் சுப்ரமணி ஆகியோர் கலந்துகொண்டு சிறப்புரையாற்றினர். சிறப்பு விருந்தினர்களாக உயர் நீதிமன்ற வழக்கறிஞர் சத்தியம் சரவணன்,தமிழகமுன்னேற்றக்கழகபொதுச்செயலாளர் விருத்தாச்சலம் கிருஷ்ணமூர்த்தி, கோகுல மக்கள் கட்சி அமைப்புச் செயலாளர் கோவிந்தசாமி,தமிழ்நாடு யாதவ மகாசபை துணைத் தலைவர் சிதம்பரம் கோகுலகிருஷ்ணன், தமிழ்நாடு ஆடு வளர்ப்போர் உரிமையாளர்கள்நலச்சங்கமாநிலத்தலைவர்முனுசாமி ஆகியோர் பங்கேற்று சங்கத்தின் கோரிக்கைகளை வலியுறுத்திப் பேசினர். தொடர்ந்து, யாதவர் சங்க வழிகாட்டி திட்டக்குடி சக்திவேல், தமிழ்நாடு யாதவ மகாசபை இலக்கூர் பொன். கொளஞ்சி, தலைமை ஆலோசகரும் மதிமுக மங்களூர் ஒன்றிய செயலாளருமான பொயனப்பாடி சம்பத்குமார் மற்றும் மகளிர் அணி தலைவி மங்களூர் லட்சுமி உள்ளிட்டோர் வாழ்த்துரை வழங்கினர். இந்த பொதுக்கூட்டத்தில், திட்டக்குடி தொகுதியில் பெரும்பான்மையாக வசிக்கும் யாதவ சமூகத்தினருக்கு தகுந்த அரசியல் அங்கீகாரம் வழங்கப்பட வேண்டும் என்றும், இந்திய விடுதலைப் போராட்ட வீரர் மாவீரன் அழகுமுத்து கோன் அவர்களின் வீர வரலாற்றைப் பள்ளிப் பாடப்புத்தகங்களில் அரசு இணைக்க வேண்டும் என்றும் ஒருமனதாக வலியுறுத்தப்பட்டது. மேலும், தமிழகத்தில் 21 சதவீத மக்கள் தொகையைக் கொண்டுள்ள யாதவர்களுக்கு கல்வி மற்றும் அரசு வேலைவாய்ப்புகளில் உரிய இடஒதுக்கீடு வழங்கப்பட வேண்டும் எனவும், கால்நடை வாரியம்அமைத்து அதன்தலைவராகயாதவசமூகத்தைச் சேர்ந்த ஒருவரை நியமிக்க வேண்டும் எனவும் தமிழக அரசுக்கு முக்கிய கோரிக்கைகள் முன்வைக்கப்பட்டன. இந்நிகழ்வில் பெண்ணாடம் செயலாளர் ராமசாமி,நகரத் தலைவர் தனபால், கிழக்குப் பகுதி தலைவர் தட்சிணாமூர்த்தி, மேற்குப் பகுதி தலைவர் மாணிக்கம், வேள்விமங்கலம் பொறுப்பாளர் வெங்கடேசன் மற்றும் பட்டாகுறிச்சி சங்கத்தின் முக்கிய நிர்வாகிகள், பொதுமக்கள் என 3000-க்கும் மேற்பட்டோர் திரளாகக் கலந்துகொண்டு கூட்டத்தைச் சிறப்பித்தனர்



ஈரோடு மற்றும் திருப்பூர் மாவட்ட காங்கயம் பகுதிகளில் பொதுமக்களின் நன்மதிப்பை பெற்று வளர்ந்து வரும் சிறந்த நிறுவனமான லெமன் ஸ்கேல் கம்பெனியின் உரிமையாளர் லெமன் நவீன் அவர்கள் படித்த கொல்லம்பாளையம் மாநகராட்சி தொடக்கப் பள்ளியில் நடைபெற்ற ஆண்டு விழாவில் சிறப்பு அழைப்பாளராக கலந்து கொண்டு குழந்தைகள் எடை போடும் எடை அளவு தராசு இலவசமாகவும் வழங்கியும், மாவட்ட கல்வி அலுவலர், மற்றும் தலைமை ஆசிரியர்கள், ஆசிரியர்கள் அங்கன்வாடி ஆசிரியர்களுடன் இணைந்து குழந்தைகளுக்கு பரிசளித்தார்.

### சின்னவேடம்பட்டி பகுதியில் திமுகவில் இருந்து

## பி.ஆர்.ஜி. அருண்குமார் எம்.எல்.ஏ. முன்னிலையில் 300க்கும் மேற்பட்டோர் அதிமுகவில் இணைந்தனர்



கோவை சின்னவேடம்பட்டி பகுதியில் நடைபெற்ற தமிழக முன்னாள் முதல்வர் ஜெயலலிதாவின் பிறந்தநாள் விழாவில் திமுக கட்சியில் இருந்து 200க்கும் மேற்பட்ட பெண்கள் உள்ளிட்ட 300க்கும் மேற்பட்டோர் கவுண்டம்பாளையம் சட்டமன்ற உறுப்பினர் பி ஆர் ஜி அருண்குமார் முன்னிலையில் அஇஅதிமுகவில் இணைந்தனர். அவர்களுக்கு எம் எல் ஏ கட்சித் துண்டு அணிவித்தும் நலத்திடங்களை வழங்கியும் கட்சியில் இணைத்துக்கொண்டார்.

கோவை சின்னவேடம்பட்டி பகுதியில் அதிமுக சார்பாக தமிழக முன்னாள் முதல்வர் ஜெயலலிதா பிறந்தநாள் விழா மற்றும் நலத்திட்டங்கள் வழங்கும் விழா நடைபெற்றது.

விழாவிற்கு வந்தவர்களை பகுதி கழக செயலாளர் மாரிச்சாமி வரவேற்றுப் பேசினார். கோவை மண்டலதகவல்தொழில்நுட்ப பிரிவு செயலாளர் விக்னேஷ் சுப்பையன் முன்னிலை வகித்துப் பேசினார்.

விழாவில் சிறப்பு விருந்தினராக கோவை புறநகர் வடக்கு மாவட்ட செயலாளர் கவுண்டம்பாளையம் சட்டமன்ற உறுப்பினர் பி ஆர் ஜி அருண்குமார் கலந்து கொண்டு சிறப்புரையாற்றினார். அவர் பேசும்போது அத்திக்கடவு கூட்டுக்குடிநீர் திட்டம் ஒன்று எம் ஜி ஆர் ஆட்சியிலும், திட்டம் இரண்டு ஜெயலலிதா ஆட்சியிலும், திட்டம் மூன்று எடப்பாடி பழனிச்சாமி ஆட்சியிலும் கொண்டுவரப்பட்டதாகவும், கோவையில் கட்டப்பட்டுள்ள அனைத்து மேம்பாளங்களும் அதிமுக ஆட்சிகாலத்தில் கட்டப்பட்டவை என தெரிவித்தார்.

இவ்விழாவில் திமுகவில் இருந்து 200க்கும்மேற்பட்ட பெண்கள் உள்ளிட்ட 300க்கும் மேற்பட்டோர் முன்னாள் திமுக நிர்வாகி எஸ் ஆர் கந்தசாமி தலைமையில் கோவை புறநகர் வடக்கு மாவட்ட செயலாளர் கவுண்டம்பாளையம் சட்டமன்ற உறுப்பினர் பி ஆர் ஜி அருண்குமார் முன்னிலையில் அஇஅதிமுகவில் தங்களை இணைத்துக்கொண்டனர்.

அதிமுகவில் இணைந்த அவர்களுக்கு சட்டமன்ற உறுப்பினர் பி ஆர் ஜி அருண்குமார் கட்சித் துண்டு அணிவித்தும், நலத்திடங்களை வழங்கியும் கட்சியில் இணைத்துக்கொண்டார்.

கட்சியில் இணைந்த முன்னாள் திமுக நிர்வாகி கந்தசாமி பேசும்போது திமுக உரிய மரியாதை இல்லை என்றும், கடன்கள் மட்டுமே வாங்குகின்றனர். மக்களுக்கு நலத்திட்டங்களை செய்வதில்லை அதனால் திமுகவில் இருந்து விலகி அதிமுகவில் 300 க்கும் மேற்பட்டோருடன் இணைவதாக தெரிவித்தார். முன்னதாக நிகழ்ச்சியில் அலங்கரித்து வைக்கப்பட்டிருந்த எம் ஜி ஆர், ஜெயலலிதா ஆகியோரது திருஉருவப்படங்களுக்கு சட்டமன்ற உறுப்பினர் பி ஆர் ஜி அருண்குமார் உள்ளிட்ட நிர்வாகிகள் மலர்கள் தூவி மரியாதை செய்தனர்.

இந்நிகழ்ச்சியில் வட்டச் செயலாளர்கள் சுரேஷ், மாரப்பன், காளிச்சாமி, ஜெயக்குமார், ஐ டி விங் மணிகண்டன், குணசேகரன், கிருஷ்ணவேணி உள்பட கட்சி நிர்வாகிகள், மகளிர் அணியினர் பலர் கலந்து கொண்டனர்.

## முதலமைச்சர் ஸ்டாலின் பிறந்தநாளை முன்னிட்டு ஏற்காடு திமுக சார்பில் கொண்டாடப்பட்டது



சேலம் மாவட்டம்,ஏற்காட்டில், சேலம் கிழக்கு மாவட்டம் ஏற்காடு ஒன்றியம் சார்பில் சார்பில், முதலமைச்சர் மு க ஸ்டாலின் அவர்களின் பிறந்தநாளைமுன்னிட்டு ஏற்காடு டவுன் காந்தி பூங்காவில் இருந்து ஒண்டிக்கடை அண்ணா சிலைவரை,500மேற்பட்டவர்கள் ஊர்வலமாக பெருந்திரளான மக்கள் மற்றும்திமுக மாவட்ட, ஒன்றிய, கிளை, நிர்வாகிகள் உள்பட பலர் கலந்து கொண்டு அண்ணா சிலைக்கு மாலை அணிவித்து மலர் தூவி மரியாதை செய்தனர்.

இதனைத் தொடர்ந்து ஏற்காடு பேருந்து நிலையத்தில்,ஏற்காடு ஒன்றிய திமுக சார்பில், 500 க்கும் மேற்பட்ட பொதுமக்களுக்கு உணவு மற்றும் இனிப்புகள் வழங்கப்பட்டது. இதில், திமுக நிர்வாகிகள் மற்றும் தொண்டர்கள் பெருந்திரளாக பங்கேற்று சிறப்பித்தனர்.



கடலூர் மாவட்டம் வேப்பூர் அடுத்துள்ள சேப்பாக்கம் ஊராட்சியில் திமுக கழகத் தலைவரும் மாண்புமிகு தமிழ்நாடு முதலமைச்சருமான மு.க. ஸ்டாலின் அவர்களின் 73 வது பிறந்த நாளை முன்னிட்டு நல்லூர் வடக்கு ஒன்றிய கழகச் செயலாளர் பாவாடை கோவிந்தசாமிவழிகாட்டுதல்படிமுன்னாள்ஒன்றியகவுன்சிலரும்கிளைச்செயலாளருமான ந.ஏழுமலை தலைமையில் பொதுமக்களுக்கு இனிப்புகள் வழங்கி உற்சாகமாக கொண்டாடப்பட்டது. இதில், ஒன்றிய பொருளாளர் வெங்கடாசலம், மாவட்ட வர்த்தக அணி துணை அமைப்பாளர் தனசேகரன், ஒன்றிய பொறியாளர் அணி அமைப்பாளர் செந்தில்குமார், ஒன்றிய கலை இலக்கிய அணி மாரிமுத்து, இளைஞர் அணி துணை அமைப்பாளர்சாக்ரடீஸ், விளையாட்டு மேம்பாட்டு அணி துணை அமைப்பாளர் உதயநிதி மற்றும் விசிக மாவட்ட நிர்வாகி செந்தில் குமார் உள்ளிட்ட பலர் கலந்து கொண்டு சிறப்பித்தனர்.

# முதலமைச்சர் ஸ்டாலின் பிறந்தநாளை முன்னிட்டு வேப்பூர் அருகே நல்லூரில் 1000 பேருக்கு அன்னதானம்



கடலூர் மாவட்டம் வேப்பூர் அடுத்த நல்லூர் கடைவீதி பகுதியில், திமுகதலைவரும்தமிழ்நாடு முதலமைச்சருமான மு.க. ஸ்டாலின் அவர்களின் 73-வது பிறந்தநாளைமுன்னிட்டு பொதுமக்களுக்கு அன்னதானம் வழங்கும் நிகழ்ச்சி மிகச் சிறப்பாக நடைபெற்றது.

நல்லூர் வடக்கு ஒன்றிய துணைச்செயலாளரும், விருத்தாச்சலம் ரோட்டரிசங்கத்தலைவரும், நல்லூர் ஸ்ரீ பாலாஜி மேல்நிலைப்பள்ளி தாளாளருமான அன்புகுமரன் தலைமையில் நடைபெற்ற இந்த விழாவில், 1000-த்திற்கும் மேற்பட்டோருக்கு அறுசுவை உணவு வழங்கப்பட்டது. இந்நிகழ்வின் போது மாவட்ட நெசவாளர் அணி துணை அமைப்பாளர் சுப்பு. அன்பழகன் மற்றும் ஏராளமான திமுக நிர்வாகிகள் உடனிருந்து பொதுமக்களுக்கு உணவினை வழங்கினர். முதலமைச்சரின் பிறந்தநாளைமுன்னிட்டு நடைபெற்ற இந்த நலத்திட்ட உதவிகள் வழங்கும் நிகழ்ச்சியில் அப்பகுதியைச் சேர்ந்த ஏராளமான பொதுமக்கள் கலந்து கொண்டு பயனடைந்தனர்.



கடலூர் மாவட்டம் வேப்பூர் அடுத்துள்ள நல்லூர் ஊராட்சியில், நல்லூர் வடக்கு ஒன்றிய திமுக சார்பில் கழகத் தலைவரும் மாண்புமிகு தமிழ்நாடு முதலமைச்சருமான மு.க. ஸ்டாலின் அவர்களின் 73 வது பிறந்த நாளை முன்னிட்டு கடைவீதியில் உள்ள பேரறிஞர் அண்ணா திருஉருவச்சிலைக்கு தலைமை செயற்குழு உறுப்பினரும் நல்லூர் வடக்கு ஒன்றிய கழக செயலாளருமான பாவாடை கோவிந்தசாமி அவர்கள் தலைமையில் மாலைஅணிவித்துமரியாதைசெலுத்திபொதுமக்களுக்குஇனிப்புகள்வழங்கிஉற்சாகமாக கொண்டாடப்பட்டது. விழாவில் கட்சியின் மாவட்ட, ஒன்றிய, கிளை அளவிலான பொறுப்பாளர்கள் கலந்து கொண்டு சிறப்பித்தனர்.

# தமிழ்நாட்டில் நிறைய திட்டங்கள் வரவில்லை மதுரையில் அன்புமணி ராமதாஸ் பேட்டி

தேசிய ஜனநாயக பொதுக்கூட்ட நிகழ்ச்சியில் பங்கேற்பதற்காக சென்னையில்



இருந்து மதுரை வந்த பாமக அன்புமணி ராமதாஸ் மதுரை விமான நிலையத்தில் செய்தியாளர்களை சந்தித்து கூறுகையில்:-

பிரதமர் தலைமையில் இரண்டாவது பொதுக்கூட்டம்மதுரையில்நடைபெறுகிறது. இது மிகப்பெரிய தாக்கத்தை ஏற்படுத்தும்

மத்திய அரசும் மாநில அரசும் இணைந்து செயல்பட்டால் தமிழ்நாட்டிற்கு நிறைய வளர்ச்சி வரும் அதுதான் எங்களுடைய எண்ணம்.

மத்திய அரசு எதிர்ப்பு போக்கு இருந்தால் எதுவும் கிடைக்காது பிரச்சனை வரும் மத்திய அரசை எதிரியாக நினைத்துக் கொண்டு எதிர்த்துக்கொண்டு அரசியல் செய்து வருகிறார்கள். வளர்ச்சி வேண்டும் அடிப்படை கட்டமைப்புகள் வேண்டும் இணக்கமாக இருந்தால் தான் கிடைக்கும். அதனால் அதிமுக கூட்டணிக்கு வாக்களிப்பார்கள். எண்ணிக்கை பெருசல்ல .. குவாண்டிட்டி பெருசல்ல குவாலிட்டி தான் பெருசு.

எத்தனை பேர் சேர்ந்து என்னசெய்தாலும்பரவாயில்லை அவங்க இயக்கத்திற்கும் அவங்கவங்க கொள்கைக்கும் கோட்பாட்டிற்கும் துரோகம் செய்தவர்கள் தான் திமுகவில் இருக்கிறார்கள்.

இதுக்கு மேல் நான் சொல்ல விரும்பவில்லை. ராமதாஸ் கூட்டணிக்கு வருவாரா என கேட்டதற்கு அது அவர்தான் முடிவெடுப்பார்.

இரண்டாவது மாநாட்டிற்கு பிறகு பல கட்சிகள் கூட்டணி வந்து சேரும் எங்கள் கூட்டணி பலமான கூட்டணி இன்னும் பலம் வந்து சேரும்.

திமுகயடைய கையாலாகதனம்.தூய்மைபணியாளர்கள் மருத்துவர்கள் உள்ளிட்டோர் கோரிக்கைகளை நிறைவேற்றுவோம் என கூறி திமுகவினர் ஆட்சிக்கு வந்துள்ளனர்.

ஐந்தாண்டு காலமாக அவர்களுடைய கோரிக்கைகளை நிறைவேற்றவில்லை.

முதல்வர் கற்பனையில் வாழ்ந்து கொண்டிருக்கிறார். மத்திய அரசும் மாநில அரசும் இணைந்து செயல்பட்டால் நன்மை தமிழ்நாட்டிற்கு.

திமுக அரசு மத்திய அரசை எதிர்த்து எதிரி போன்ற போக்கை கடைபிடித்ததின் காரணத்தினால் நிறைய பிரச்சினைகள் தமிழ்நாட்டில் நிறைய திட்டங்கள் வரவில்லை.

எங்கள் கூட்டணி வெற்றி பெற்றால் இணக்கமான சூழ்நிலை பலதிட்டங்கள் வரும் கட்டமைப்புகள் வரும். தமிழ்நாட்டிற்கு பல்வேறு முன்னேற்றங்கள்கிடைக்கும். இதை மக்கள் புரிந்துள்ளனர்.என்றார்.

பேட்டியின் போது வழக்கறிஞர் பாலு ,வன்னியர் சங்க மாநில துணைத்தலைவர் நடராஜன், மாவட்ட செயலாளர் எஸ் கே தேவர், சண்முகநாதன்,ராஜா,அழகர்சாமி, வீரக்குமார்,வழக்கறிஞர் ராஜ்குமார், செல்வம் உள்ளிட்ட நிர்வாகிகள் உடன் இருந்தனர்



தமிழ்நாடு முதலமைச்சரும், திமுக தலைவருமான மு.க.ஸ்டாலின் அவர்களின் பிறந்தநாளை முன்னிட்டு, ஈரோடு தெற்கு மாவட்ட திமுக வீரப்பன்சத்திரம் பகுதி சார்பாக, மாநகராட்சி 14வது வார்டில் உற்சாகமாகக் கொண்டாடப்பட்டது. முன்னாள் திமுக நெசவாளர் அணி மாநகர துணை அமைப்பாளர் சக்திவேல் தலைமையில் நடைபெற்ற இந்நிகழ்வில், பொதுமக்களுக்கு இனிப்புகள் வழங்கி சிறப்பிக்கப்பட்டது. இதில் வட்ட கழகச் செயலாளர் மாணிக்கம், அவைத்தலைவர் ராஜேந்திரன், வார்டு பிரதிநிதிகள் தென்னரசு, நாகமாணிக்கம் ஆகியோர் முன்னிலை வகித்தனர். மேலும் இஸ்மாயில், லோகு, நாகராஜ், பழனி உள்ளிட்ட கழக நிர்வாகிகள் மற்றும் தொண்டர்கள் திரளாகக் கலந்து கொண்டு விழாவினைச் சிறப்பித்தனர். முதலமைச்சரின் பிறந்தநாளையொட்டி 14வது வார்டு பகுதி முழுவதும் திமுகவினர் உற்சாகத்துடன் கொண்டாடினர்.

## இ.திருமகன் ஈவெரா 50வது பிறந்தநாளை முன்னிட்டு,

# ஈரோடு மாநகர் மாவட்ட காங்கிரஸ் கமிட்டி சார்பில் புகழஞ்சலி மற்றும் ரத்ததானம், நலத்திட்ட உதவிகள் வழங்கப்பட்டது



ஈரோடு மாநகர் மாவட்ட காங்கிரஸ் கமிட்டி தலைவர் பா. ராஜேஷ் ராஜப்பா தலைமையில் இந்த நிகழ்வு ஒருங்கிணைக்கப்பட்டது.

ஈரோடு காங்கிரஸ் அலுவலகமான'ஜவஹர் இல்லத்தில்' நேற்று காங்கிரஸ் பேரியக்கத்தின் மூத்த தலைவர் ஈ.வி.கே.எஸ். இளங்கோவன் மனைவி வரலட்சுமி இளங்கோவன்,மறைந்த திருமகன் ஈவெராவின் மகள் சமணா ஈவெரா மற்றும் குடும்பத்தினர் திருமகன் ஈவெராவின் திருவுருவப் படத்திற்கு மாலை அணிவித்து மலர் தூவி மரியாதை செலுத்தப்பட்டது. பிறந்தநாளை முன்னிட்டு வெறும் கொண்டாட்டமாக இல்லாமல், மக்கள் சேவையாக ரத்த தான முகாம் மற்றும் இலவச கண் சிகிச்சை முகாம் ஆகியவை மதியம் 1 மணி வரை சிறப்பாக நடைபெற்றது "மக்களுக்காக வாழ்ந்த ஒரு இளம் தலைவனின் நினைவைப் போற்றும் வகையில்,50க்கும் மேற்பட்ட தொண்டர்கள் ரத்த தானம் செய்து தங்களது அன்பை வெளிப்படுத்தினர்." நிகழ்வில் முன்னாள் சட்டமன்ற உறுப்பினர், முன்னாள் மாவட்டத் தலைவர்கள், மாவட்ட மாநகர, மண்டல நிர்வாகிகள்,வட்டாரத் தலைவர்கள், உள்ளாட்சி பிரதிநிதிகள் மற்றும் ஏராளமான காங்கிரஸ் செயல்வீரர்கள் திரளாகக் கலந்து கொண்டு தங்கள் அஞ்சலியைச் செலுத்தினர்.



தமிழகத்தில் விரைவில் நடைபெற உள்ள சட்டமன்றத் தேர்தலில் ஈரோடு மேற்கு சட்டமன்ற தொகுதியில் மீண்டும் போட்டியிடுவதற்கு சென்னையில் உள்ள திராவிட முன்னேற்றக் கழக தலைமை அலுவலகமான அண்ணா அறிவாலயத்தில் தமிழ்நாடு வீட்டு வசதி மற்றும் மதுவிலக்கு ஆயத்தீர்வை துறை அமைச்சர் சு.முத்துசாமி விருப்பு மனுவினை வழங்கினார். இந்த நிகழ்வில் உடன் ஈரோடு நாடாளுமன்ற உறுப்பினர் கே.இ. பிரகாஷ், ஈரோடு கிழக்கு சட்டமன்ற தொகுதி உறுப்பினர் வி.சி. சந்திரகுமார் மற்றும் கட்சி நிர்வாகிகள் உடன் இருந்தனர்.

# பவானி மற்றும் பெருந்துறை தொகுதிகளுக்கு திமுக சார்பில் ந.தவமணி விருப்பமனு தாக்கல்



தமிழகத்தில் 2026-ஆம் ஆண்டு நடைபெறவுள்ள சட்டமன்றத் தேர்தலை முன்னிட்டு திமுக சார்பில் போட்டியிட விரும்புவோரிடமிருந்து விருப்பமனுக்கள் பெறப்பட்டு வருகின்றன. இதன் ஒரு பகுதியாக, ஈரோடு மாவட்டம்பவானிசட்டமன்றத் தொகுதியில் போட்டியிடுவதற்காக ஈரோடு மத்திய மாவட்ட திமுக வர்த்தக அணித் தலைவர் ந.தவமணி விருப்பமனு தாக்கல் செய்துள்ளார். முன்னதாக அவர் தமிழக வீட்டுவசதி மற்றும் நகர்ப்புற வளர்ச்சித்துறை அமைச்சர் சு. முத்துசாமி அவர்களை நேரில் சந்தித்து ஆசி பெற்றார். அதனைத் தொடர்ந்து ஈரோடுமத்தியமாவட்டச் செயலாளர் தோப்பு என்.டி.வெங்கடாசலம் அவர்களைச் சந்தித்து வாழ்த்துப் பெற்ற பின் தனது விருப்பமனுவை வழங்கினார். இதனைத் தொடர்ந்து, பெருந்துறை சட்டமன்றத்தொகுதியில்போட்டியிடுவதற்காக ஈரோடுமத்தியமாவட்டச் செயலாளர் தோப்பு என்.டி.வெங்கடாசலம் அவர்களின் பெயரில் உரிய தொகையைச் செலுத்தி விருப்பமனுவை மாவட்ட வர்த்தக அணித் தலைவர் ந. தவமணி தாக்கல் செய்தார். பவானி மற்றும்பெருந்துறைஆகிய இரண்டு தொகுதிகளிலும் திமுகவின் வெற்றியை உறுதி செய்யும் வகையில் இந்த விருப்பமனுக்கள் தாக்கல் செய்யப்பட்டுள்ளன. இந்நிகழ்வின் போது முக்கியக் கட்சி நிர்வாகிகள், வர்த்தக அணி நிர்வாகிகள் மற்றும் ஏராளமான கழகத் தொண்டர்கள் உடனிருந்து சிறப்பித்தனர்.



# தமிழ் தமிழ் எனக்கூறும் முதல்வர் தமிழர் மரபுபடி பிரதமரை வரவேற்க மறுப்பது ஏன்?

## தமிழிசை சௌந்தர்ராஜன் கேள்வி

மீனாட்சி இந்த இடத்தில் நான் ஆட்சி பிடிப்பதற்காக நல்ல மாநாட்டை போட்டு இருக்கிறோம்அதில்கூட்டணி கட்சி தலைவர்.

 ிச்சயமாக ஆட்சி மாற்றம் வரும் என்பதற்கு கூட்டம் ஒரு அச்சாரம்

தமிழக முதல்வர் மு க ஸ்டாலின் அவர்களுக்கு பிறந்தநாள் வாழ்த்துக்களை தெரிவித்துக் கொள்கிறேன்தமிழ்நாடு வந்தாரே வாழ்வைக்கும் வரவேற்கும் தமிழ்நாடு தமிழ்கலாச்சாரம்என்பது யாராக இருந்தாலும் அவர்களை வாங்க என்று வரவேற்று தமிழ் கலாச்சாரம் தமிழ் பண்பாடு

நேற்றைய தினம் இன்று பொய்யாகபேசிக்கொண்டிருக்கிறேன் முதலமைச்சராக அவர்கள் நமது பாரத பிரதமர் அவர்கள் சென்னை வருகிறார் அவரை வரவேற்பதில் முதலமைச்சருக்கு என்ன பிரச்சனை

அரசியல் வேறு பிரதமர் அரசியல்வாதியாக வரவில்லை தமிழகத்திற்கு 7000 கோடிக்கு மேல் நல்ல திட்டங்களை சமர்ப்பிப்பதற்கு வருகிறார் ஒன்றும் கொடுக்கவில்லை என்று சொல்கிறீர்கள் ஆனால் திட்டத்தை நாட்டு மக்களுக்கு தமிழ்நாடு மக்களுக்கு கொடுக்க வரும்பொழுது

வரவேற்க வேண்டியது புரோட்டாக்காள் நிகழ்வுகளை தாண்டி ஒரு அன்புடன் வரவேற்க வேண்டும

தனிப்பட்டகால்புணர்ச்சியோடு இருப்பது ஒழிய வேண்டும் என்பது எனது வேண்டுகோள்

அரசியலைத் தாண்டி நல்ல கலாச்சாரம் திராவிட முன்னேற்றக் கழகத்தினால் அளிக்கப்பட்டு வருகிறது

பாரதப் பிரதமரை முதலமைச்சர் அவர்கள் வரவேற்று இருக்க வேண்டும்

தமிழ்நாட்டிற்கு நல திட்டங்களை சமர்ப்பிக்க வந்துள்ளார் நரேந்திர மோடி அனைத்து கூட்டணி கட்சிகளையும் வரவேற்கிறார் ஆனால் திராவிட முன்னேற்றக் கழகம் அதன் சின்னத்தில் கூட்டணி கட்சிகளை போட்டியிட வைக்கிறது

மக்கள் எல்லோரும் மிகுந்த சிரமத்திற்கு ஆளாக இருக்கிறார்கள் ஆனால் விளம்பரம் மட்டும் அதிக பணம் செலவு செய்து திமுக அரசு செயல் படுகிறது

பெரியாரின் புகைப்படம் அகற்றுவது குறித்த கேள்விக்குஎந்த படம் இருக்க வேண்டும் என்று மாநாடு நடத்துபவர்களின் மாநாடு நடத்துபவர்கள் உரிமை

திமுகவடமொழிஎழுத்துக்களும் எல்லா இடத்திலும் முருகன் படம் மீனாட்சி படம் வைக்க வலியுறுத்தினால் அவர்கள் செய்வார்ஜெயலலிதா படமும் எம்ஜிஆர் அவர்களின் படமும் அகற்றப்படாமல் பார்த்துக் கொள்ள வேண்டும்

எந்த கொள்கையை எடுத்துச் செல்கிறோமோ அந்த கொள்கையின் மாறுபாடுகளுக்கு உட்பட்ட தலைவர்களின் படம் இருந்ததால் எடுக்கப்பட்டது என தமிழிசை சௌந்தரராஜன் கூறினார்.



ஈரோட்டில் முன்னாள் சட்டமன்ற உறுப்பினர் திருமகன் ஈவெராவின் 50 ஆவது பிறந்த தினம் சிறப்பாக கொண்டாடப்பட்டது. சூரம்பட்டி திருமகன் ஈவேரா பவனில் இளைஞர் காங்கிரஸ் மாவட்ட செயலாளர் கல்கி வெங்கடேசன் மாநகர காங்கிரஸ் துணை தலைவர் கே.எஸ் செல்வம் ,மாநகர மாவட்ட பொதுச் செயலாளர் கண்ணப்பன், தமிழ்நாடு காங்கிரஸ் கமிட்டி தொழிலாளர் யூனியன் மாநிலத் துணைத் தலைவர் எம்.ராஜேந்திரன், ஈரோடு மாநகரத் துணைத் தலைவர் ஈஸ்வர மூர்த்தி ,கௌதமன் ,ஈரோடு மாநகர நெசவாளர் அணி தலைவரும் மாரிமுத்து, விஜயராகவன் கலந்துகொண்டு பொது மக்களுக்கு இனிப்புகள் வழங்கினர்.

# சமூக சேவைக்கு சென்னையில் கௌரவம் கடலூர் சேவகருக்கு டாக்டர் பட்டம்



சமூக சேவையில் தொடர்ந்து அர்ப்பணிப்புடன் செயல்பட்டு வந்த கடலூர் மாவட்டத்தைச் சேர்ந்த சமூக சேவகருக்கு சென்னையில் நடைபெற்ற சிறப்பு விழாவில் டாக்டர் பட்டம் வழங்கப்பட்டது.

கடலூர்மாவட்டம்காட்டுமன்னார்கோவில்அருகே ஆயங்குடி கிராமத்தைச் சேர்ந்த தர்ம சக்தி சேனை அறக்கட்டளை நிறுவனர் பரமகுரு - தொடர்ந்து பல்வேறுசமூகசேவைபணிகளில்ஈடுபட்டுவருகிறார்.

இந்நிலையில் சவுத் வெஸ்டர்ன் அமெரிக்கன் யூனிவர்சிட்டி சார்பில் வழங்கப்பட்ட இந்த கௌரவம், அவரின் பல ஆண்டுகால சமூகப் பணிக்கான பாராட்டாக அமைந்தது.

இதனைத் தொடர்ந்து அரசியல் கட்சி நிர்வாகிகள், சமூக ஆர்வலர்கள் மற்றும் கிராம பொதுமக்கள் நேரில் சென்று வாழ்த்து தெரிவித்தனர்.

குடும்பத்தினரும் நண்பர்களும் கலந்து கொண்டு மகிழ்ச்சியை பகிர்ந்து கொண்டனர்.

"சமூகத்திற்காக செய்த உழைப்பே இந்த கௌரவத்திற்கு காரணம்" என பரமகுரு தெரிவித்தார்.

Printed by, Sri Simmha Enterprises, Published by M.APROSE, onbehalf of M.APROSE, printed at THIRUVALLUR, and Published at ,1, THATTANKAADU 4TH STREET, KONGU VELAAN NAGAR, VTC PERIYASEMUR, PO: PERIA SEMUR, ERODE, TAMIL NADU - 638004 ,Editor HARI KRISHNAN M.